19th March 1959]

Sri A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware that this diversion of the Krishna river will solve the Andhra Government's flood problem and our food problem?

Mr. SPEAKER : The hon. Member must ask the Andhra Government. How can the Hon. Minister answer this question?

Sri V. K. KOTHANDARAMAN : சார், கிருஷ்ணா நதித் தண்ணீர் சம்பந்தமாக முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது அல்லவா? அவர்கள் அந்த தண்ணீரைக் கொடுக்கச் சம்மதிக்கிறார்களா? அந்தத் தண்ணீரைப் பெற இன்னும் எத்தனை வருஷ காலம் பிடிக்கும் என்று சர்க்கார் நினைக்கிறார்கள்.

The Hon. Sri P. KAKKAN : முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மட்டும் அல்ல. எற்கெனவே அந்த மாகாண மக்களும் இந்த மாகாண மக்களும் ஒன்றாக இருக்கும்போது, இரண்டு ராஜ்யங்களுக்கு ஒரே சர்க்கார் இருக்கும்போது இப்பொழுது உள்நாட்டு மந்திரியாக இருக்கும் பக்தவத்சலம் முதலியார் அவர்கள் இந்தக் கிருஷ்ணா, பெண்ணார் திட்டத்தைக் கொண்டுவர முயற்சி செய்ய ஆரம்பித்தார்கள். இது பலவித திட்டத்தைப் பொறுத்திருக்கிறது. நந்திகொண்டா திட்டம், புலிச்சிந்தலாத் திட்டம் என்ற பல திட்டங்கள் இருக்கின்றன. ஜெனரல் கவுன்சில் மூலமாக கிருஷ்ணா, கோதாவரி திட்டத்தை நிறைவேற்ற முயற்சி நடந்து வருகிறது.

Sri S. LAZAR : சார், இந்தத் திட்டத்தைப் பற்றிய முடிவு எடுக்கக் காலதாமதம் ஆவதற்கு முக்கிய காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN : காலதாமதம் ஆகிறது என்று சொல்ல முடியாது. ஆந்திர மாகாண சீப் என்ஜினீயர் இதைப் பற்றி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அது பரிசீலனையில் இருக்கிறது.

The Hon. Sri C. SUBRAMANIAM : இதிலே முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இருக்கிறது. இப்பொழுது இந்தக் கிருஷ்ணா நதியின் தண்ணீர் ஆந்திராவில் உள்ள பல ஜில்லாக்களில் பாய்ந்துகொண்டிருக்கிறது. அதை இந்தப் பக்கம் திருப்பிவிட வேண்டுமென்று சொன்னால் கோதாவரித் தண்ணீர் அவர்களுக்குக் கிடைக்கும்படிச் செய்யவேண்டும். இந்தக் கிருஷ்ணா, கோதாவரித் திட்டத்தை அமுலாக்குவது பரிசீலனையில் இருந்து வருகிறது. இதைப் பற்றிக் கேள்வி போடுவதால் இந்தப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. என்ஜினீயர்கள் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்த பிறகு ஆந்திர மாநிலத்தில் உள்ளவர்கள் பிரச்னை என்ன எவ்வளவு தண்ணீர் வேண்டுமென்பதை பற்றியெல்லாம் பரிசீலனை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இதைப் பற்றிக் கேள்வி போடுவது இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண உதவுவதற்குப் பதிலாக சில சமயங்களில் சங்கடங்களை எற்படுத்திவிடும் என்று அங்கத்தினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Untouchability

* 811 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state with reference to the answer given to the Unstarred question No. 8, placed on the Table of the House on 24th March 1958, whether the decision taken by the Government to broadcast a drama or dialogue over the All-India Radio every month in order to give publicity to the provisions of the Untouchability (Offences) Act of 1955, has since been implemented?

The Hon. Sri P. KAKKAN : No, Sir.

As difficulty is felt in furnishing the necessary materials to the All-India Radio in the form of a drama or dialogue, the Director of Harijan Welfare has since agreed to arrange for the monthly broadcast in the form of straight talks.

Sri M. JAGANNATHAN : நாடகம், சம்பாஷணை மூலமாக தீண்டாமை குற்ற சட்டத்திற்கு விளம்பரம் செய்ய என்ன கஷ்டம் சர்க்காருக்கு இருக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா?

The Hon. Sri P. KAKKAN : கஷ்டம் ஒன்றும் இப்பொழுது இல்லை. இப்பொழுது தீண்டாமை ஒழிப்பு பற்றிப் பேச ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. பின்னர் "டயலாக்" எழுதி அதை நடிக்க ஆட்கள் கிடைத்தவுடன் அதற்கான வேலை துவக்கப்படும்.

Sri N. K. PALANISAMI : பிரசாரம் செய்வதன் மூலமாக தீண்டாமை ஒழிந்து விடுமா? பொருளாதாரத் துறையில் முன்னேற்றம் அடைந்தல் தான் தீண்டாமை ஒழியும் என்பதை அரசாங்கம் அறியுமா ?

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஹரிஜனங்களில் பணக்காரர்களாக இருந்தாலும் கூட அவர்கள் தீண்டத்தகாதவர்கள் என்று தான் கருதிக்கொண்டிருந்தார்கள். பொருளாதாரத்தில் முன்னேறிவிட்டால் மட்டும் தீண்டாமையை ஒழித்து விட முடியாது. மனமாற்றம் ஏற்பட வேண்டும்.

Assignment of house-sites for Harijans in Erode taluk

* 816 Q.—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have received any representation in November 1958 regarding the assignment of house-sites to the Harijans in the Erode taluk, Coimbatore district ; and

(b) if so, the steps taken thereon?

The Hon. Sri P. KAKKAN : (a) Yes, Sir.

(b) The Collector of Coimbatore is examining the need for providing house-sites to Harijans in Vellaraveli and other places in Erode taluk. He is also taking steps to assign poramboke lands wherever available.

Highways Department

* 817 Q.—Sri V. K. KOTHANDARAMAN (on behalf of Sri K. SATTANATHA KARALAYAR) : Will the Hon. the Minister for Public Works be pelased to state—

(a) whether all the divisions of the Highways Department have implemented the orders contained in G.O. No. 1657, Public Works, dated 6th June 1958; and

(b) if not, the reasons therefor?

The Hon. Sri P. KAKKAN : (a) Yes, Sir.

(b) Does not arise.